33—

மேம்பாலம்

***21091—திரு. அம்மன் K. அர்ச்சுணன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் (வடக்கு) தொகுதி, மேட்டுப்பாளையம் சாலை, எம்.ஜி.ஆர். மார்க்கெட் அருகில் புதிய மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மேட்டுப்பாளையம் சாலை, சாயிபாபா காலனி சந்திப்பில் 59.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் கட்டும் பணிக்கு ஒன்றிய அரசிடமிருந்து, ஆண்டுத் திட்டம் 2021–2022–ன்கீழ் ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. மேம்பாலம் கட்டும் பணிக்கு CMRL நிறுவனத்திடமிருந்து, தேசிய நெடுஞ்சாலை மேம்பாலத்தின் நேர்ப்பாட்டிற்கு தடையில்லாச் சான்று 4–7–2023–ல் பெறப்பட்டிருக்கிறது. இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு, ஒன்றிய அரசினுடைய ஒப்புதலுக்கு 8–1–2024–ல் அனுப்பப்பட்டிருக்கிறது. ஒப்புதல் பெற்றவுடன், டெண்டர் கோரப்பட்டு, அந்தப் பணிகளைத் துவக்க இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எங்கள் கழகப் பொதுச் செயலாளர் அவர்களையும், எங்களுடைய எதிர்கட்சிக் கொறடா அவர்களையும், துணைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாலம் கட்டுவதற்கு முயற்சி எடுப்பதாகக் கூறியதற்கு நன்றி. அதற்கும் கவுண்டம்பாளையத்திற்கும் இடையில் 260 மீட்டர் தூரம்தான் உள்ளது. இடைப்பட்ட தூரத்தையும் இந்தப் பாலத்தோடு சேர்த்துக் கட்டினால், கோவையிலிருந்து நீலகிரி, மைசூர் வழியாகச் செல்லும் அத்தனை வாகனங்களும் இடையூறு இல்லாமல் செல்வதற்கு வழி ஏற்படும் என்பதற்காகத்தான்*

இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறோம். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 260 மீட்டர் தூரத்தை, சாயிபாபா காலனி சந்திப்பில் புதிய மேம்பாலம் கட்டுவதற்கான ஒப்பந்தத்துடன் சேர்த்து, இதனையும் கட்டித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவுண்டம்பாளையம்–சங்கனூர் சாலை என்பது கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்டது. மாநகராட்சியில்தான் திட்டங்கள் தீட்டப்பட்டு, அதற்குப் பாலம் கட்ட முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற பாலம் என்பது, தேசிய நெடுஞ்சாலை மூலமாகக் கட்டப்படுகிறது. அதனால், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுத்தான் இதற்கான பதிலைப் பெற முடியும். இதைப் பொறுத்தளவில், ஒப்பந்தம் கோரப்பட்டு, முன்னுரிமை அளிக்கப்பட்டு, பாலம் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கிறதா? சரி, பேசுங்கள்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை மூலமாக அந்தப் பாலம் கட்டப்படுகிறது. அது மாநகராட்சிக்குச் சொந்தம் இல்லை. சாயிபாபா காலனி–கவுண்டம்பாளையத்திற்கு இடைப்பட்ட தூரம், தேசிய நெடுஞ்சாலையில் உள்ளதைத்தான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: இந்த கேள்வி வருகிறது என்றவுடன் நான் விசாரித்துவிட்டேன். குறிப்பிட்ட அந்த தூரம் மாநகராட்சிக்குச் சொந்தமான சாலை. அதனால் மாநகராட்சியினுடைய அனுமதியைப் பெற்றுக் கொடுத்தால்தான் அவர்கள் கட்ட முடியும். அதனால் நகராட்சிதான் இதனைச் செய்ய முடியும். (குறுக்கீடு)

2024 பிப்ரவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள், சொல்லுங்கள்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: கவுண்டம்பாளையத்திலிருந்து சங்கனூர் செல்கிற வழியில் railway crossing இருக்கிறது. அதற்கு ஓர் உயர்மட்டப் பாலம் கட்டித் தருவாரா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்பதற்கு முன்னரே. . . (குறுக்கீடு) இது NH சாலையில்தான் உள்ளது. இரண்டு பாலமும் கட்டப்பட்டுள்ளது. ஆகையினால் அந்த 260 மீட்டர் கண்டிப்பாக மாநகராட்சிக்குச் சொந்தமல்ல. அதேபோலத்தான், கணபதி விரிவாக்கப் பணிக்காக 38 கோடி ரூபாய் எங்களுடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் நிதி ஒதுக்கப்பெற்றும் இன்றுவரை ஒரு துரும்பைக் கூட கிள்ளவில்லை. இதுகுறித்து கேட்கின்றபொழுது, நீங்கள் இந்த அமைச்சரைச் சொல்கிறீர்கள். இந்த அமைச்சர் அந்த அமைச்சரைச் சொல்கிறார். இருவரிடமும் இதுகுறித்து கேட்டுவிட்டு, நான் Collector-ஐ சென்று பார்க்கும்பொழுது, வருவாய்த் துறையில் surveyor இல்லை என்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் கூறியதுபோல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் பணம் ஒதுக்கியிருந்தால், அவர்களுக்குப் பிறகு திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 4 வருடங்கள் ஆட்சியில் இருந்திருக்கிறார்கள். அவர்கள் ஏன் செய்யவில்லை என்கிற கேள்வி வரும். இதில் குற்றச்சாட்டுகள் எல்லாம் சொல்லக்கூடாது. நீங்கள் மேம்பாலம் கேட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு)

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: ஒரு நிமிடம். நான் உண்மையிலேயே குற்றச்சாட்டு சொல்லவில்லை. இந்தப் பணம் மூன்றாண்டு காலமாக மாநகராட்சியில் ** என்பதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2024 பிப்ரவரி 21

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28 ஆம் தேதி நான் கோயம்புத்தூர் செல்வதாக இருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. உட்காருங்கள், ** என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: அன்றைக்கு மாநகராட்சி ஆணையாளர் அவர்களையும், சம்பந்தப்பட்ட துறையின் மேற்பார்வை பொறியாளர் அவர்களையும் அழைத்துக்கொண்டு, உங்களையும் வைத்துக்கொண்டு அது எந்தச் சாலை என்பதை விரிவாக அங்கே நேரடியாகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.

திரு. கோ. தளபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை Apollo மருத்துவமனை signal-ல் மேம்பாலம் கட்டும் பணி, நீதிமன்ற வழக்கின் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. வண்டியூர் கண்மாயின் கரையோரப் பகுதிகளில் ஆழமாகவும், பலமாகவும் பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. நீர்நிலைகள் பாதிக்கப்படும் என நீதிமன்றம் கருதுவதாகச் செய்திகளைப் பார்த்தோம். ஆனால், பாதுகாப்புச் சுவர் ஏற்கெனவே இருந்த கரையைவிட உயரமாகவும், உறுதியாகவும் இருக்குமென்றும், மேம்பாலத்தினுடைய தூண்கள் சுமார் 200 மீட்டர் மட்டும்தான் கரையில் நிறுவப்படுகின்றன என்றும், மற்றபடி எந்தவிதத்திலும் நீர்நிலைகள் பாதிக்கப்படாது என்றும், போக்குவரத்திற்கு மிகமிக அவசியமான மேம்பாலச் சாலையாக இருப்பதால், அதன் அவசியத்தினைக் கருத்தில்கொண்டு, நீதிமன்றத்தில் விளக்கமாக எடுத்துக்கூறி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் மேம்பாலப் பணியினை விரைந்து முடிக்க முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2024 பிப்ரவரி 21]

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் அடங்கிய தொழில்நுட்ப வல்லுநர் குழுவால் பாலத்தினுடைய நேர்பாடு வரைபடம் அங்கீகரிக்கப்பட்டு, பின்னர் அரசின் சார்பாக நெடுஞ்சாலைத் துறைக்கு ரூபாய் 150.28 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. புதிதாக அமையவிருக்கும் பாலம் வண்டியூர் கண்மாய் கரையில் அமையவிருப்பதால், தலைமைப் பொறியாளர், பொதுப் பணி, நீர்வள ஆதாரத் துறையினுடைய தடையில்லாச் சான்று 31–7–2023 அன்று பெறப்பட்டு, ஒப்பந்ததாரர்கள் கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்காக 29 மாதங்கள் என நிர்ணயிக்கப்பட்டு, 10–11–2023 அன்று ஒப்பந்தம் கோரப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரத்தால் அந்தப் பாலம் கட்டுகிற பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன. தற்போது 10 சதவிகிதப் பணிகள் முடிந்துவிட்டன. ஆனால், இப்பொழுது ஒரு பொது நல வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் தொடர்ந்துள்ளார்கள். அதுசம்பந்தமாக, நாம் ஏற்கெனவே, 11–1–2024 அன்று சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் counter போட்டிருக்கிறோம். அதில் வண்டியூர் கண்மாய் கரையை மாற்றி, அதைவிட உறுதியாக cement concrete போடப்பட்டு, மண்சரிவினைத் தடுத்து நிறுத்தும் விதிமுறைகள் ஏற்கெனவே ஒப்பந்தங்களில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறோம். அதற்காக உயர் நீதிமன்ற மதுரை கிளையில் ஒரு தடையாணையைக் கொடுத்திருக்கிறார்கள். தடையாணையில் அந்த கண்மாய் பகுதிகளை மட்டும் விட்டுவிட்டு, மீதி பாலப் பணிகளைக் கட்டுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். மீதியளவிலான பாலங்கள் கட்டுகிற பணியானது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அடுத்த hearing வருகிறபொழுது, main case–ஐ எடுத்து நடத்தி, அதற்கான அனுமதியைப் பெற்று, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தக் கண்மாய் பகுதிகளிலும் பாலங்கள் கட்டுகின்ற பணிகளிலே முன்னுரிமை அளிக்கப்பட்டு, துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி மாவட்டத்தில் உள்ள தென்காசி–திருநெல்வேலி சாலையில் உள்ள பாவூர்சத்திரத்தில்

[2024 பிப்ரவரி 21

உள்ள மேம்பாலம் மற்றும் அந்தச் சாலையில் பாலப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தினால் தொடர்ந்து அங்கு போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுக்கொண்டிருக்கிற சூழ்நிலை உள்ளது. முக்கியமான பிரச்சினை என்னவெனில், தென்காசி–திருநெல்வேலி சாலையில் சுங்கச்சாவடி ஒன்று என்னுடைய ஆலங்குளம் தொகுதி மாராந்தையில் அமைக்கப்படவுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே OMR–ல் உள்ள நாவலூர் சுங்கச்சாவடியில் கட்டணம் வசூலிப்பதை இரத்து செய்தார்கள். மாராந்தையில் சுங்கச்சாவடி அமைத்தால், வியாபாரப் பெருமக்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படும். கட்டணம் செலுத்திவிட்டுத்தான் இனிமேல் தென்காசி சாலையில் வரவேண்டிய சூழ்நிலை ஏற்படும். இதனை மாற்றியமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாராந்தையில் அமைக்கப்படவுள்ள சுங்கச்சாவடியைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசியிலிருந்து திருநெல்வேலி சாலை என்பது 46 கிலோ மீட்டர் கொண்டது. ரூபாய் 431 கோடி மதிப்பீட்டில் நான்கு வழிச் சாலையாக அமைக்க உலக வங்கி உதவியுடன் பணிகள் அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னையிலே OMR ரோட்டில் இருக்கிற 4 சுங்கச்சாவடிகளை அகற்றியிருக்கிறார். அதைப்போல, இதை அகற்ற வேண்டுமென்று அவர் குறிப்பிடுகிறார். OMR–ஐப் பொறுத்தவரை, மாநில நிதியிலிருந்து நேரடியாக அந்தச் சுங்கச்சாவடி இருந்த காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநில நிதியிலிருந்து வழங்கப்பட்ட காரணத்தினால் அதனை இரத்து செய்யலாம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், ரூபாய் 431 கோடி மதிப்பீட்டில் உலக வங்கியின் உதவியோடு நீங்கள் குறிப்பிட்ட அந்த நான்கு வழிச்சாலையை அமைத்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், உலக வங்கியுடன் ஒப்பந்தம் போடுகிறபோது, ‘கடனைக் கொடுங்கள், நாங்கள் திரும்பவும் சுங்கச்சாவடி அமைத்துக் கட்டிவிடுகிறோம்’ என்று ஏற்கெனவே நீங்கள் ஆட்சியில் இருந்தபோதுதான், ஒப்பந்தம் போடப்பட்டு கையெழுத்தெல்லாம் போட்டிருக்கிறீர்கள்.

ஆதலால், நாங்கள் உலக வங்கியிடம் பேச்சுவார்த்தை நடத்திவிட்டுத்தான் இதன்மீது நடவடிக்கை எடுக்க முடியும். ஏனென்றால், உலக வங்கிதான் இதற்குக் கடன் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் போட்ட ஒப்பந்தம்தான்; Toll gate போடப்பட்டு வசூல் செய்து கொடுக்கப்படும் என்ற conditions-ன் அடிப்படையில் கடன் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, உலக வங்கியிடம் பேசி, அவர்கள் ஒப்புக்கொண்டால்தான் நாம் சுங்கச்சாவடியின் வசூலை நிறுத்த முடியும். நீங்கள் agreement ஒன்றை போட்டுக் கொடுத்துவிட்ட பின்பு, அதை நாங்கள் follow செய்யவில்லை என்று சொன்னால், நாளைக்கு AG audit-ல் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். நீங்கள் மாநில நிதிக்கு கடன் வாங்கும்போது இப்படி ஒரு condition-ஐ போட்டுவிட்டு, எப்படி கட்டணம் வசூல் செய்யாமல் இருக்கலாம் என்கிற ஒரு நிலைமை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இன்றைக்கு மாநிலத்தின் நிதி நிலைமை என்ன என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆதலால், அது உலக வங்கியுடன் பேசி முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றின் குறுக்கே சேலம் மாவட்டம் பூலாம்பட்டியையும், ஈரோடு மாவட்டம் நெருஞ்சிப்பேட்டையையும் இணைக்கின்ற ஒரு பாலம்; சேலம் மாவட்டம் கொளத்தூர் ஒன்றியத்தில் கோட்டையூர் பகுதியையும், பெண்ணாகரத்தையும் இணைக்கின்ற ஒரு பாலம்; ஆக, காவிரி ஆற்றின் குறுக்கே, இந்த இரண்டு பாலங்களும் அவசியமான பாலங்கள் ஆகும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பாலங்களை அமைத்துத் தர வேண்டும். கோட்டையூர், பெண்ணாகரம் பாலம் அமைக்கப்பட்டால், தோப்பூரிலே நடக்கின்ற விபத்துகளுக்கு ஒரு தீர்வு வரும், ஒரு மாற்றுப் பாதையாக அது இருக்கும் என்பதைக் கருத்திலே கொண்டு, இந்தப் பாலங்களை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

[2024 பிப்ரவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றுப் பாலத்தைப் பற்றி இரண்டு இடங்களிலே அவருடைய தொகுதி சம்பந்தப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர் கடிதம் கொடுத்தால், அதை ஆய்வு செய்து, இந்த நிதியாண்டிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, சேர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதேபோன்று, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், நம்முடைய அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்கள் ஏற்கெனவே அந்தக் கேள்வியை இந்தச் சட்டமன்றத்திலே தொடர்ந்து வைத்து வருகிறார்கள். அதையே நீங்களும் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். ஏற்கெனவே, அதற்கு DPR தயார் செய்ய முயன்றபோது, அங்கு மேட்டூர் அணையினுடைய தண்ணீர் இருப்பிலே இருக்கிறது, ஆதலால், அங்கு pile foundation போட்டால்கூட நிற்காது என்று ஒரு சாத்தியக்கூறு அறிக்கையைக் கொடுத்துவிட்டார்கள். ஆனாலும், அவர் விடுவதாக இல்லை. ஏனெனில், ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கடிதம் கொடுத்து, அவர் மூலமாக வந்ததால், மறுபடியும் அதற்கு முக்கியத்துவம் தந்து, வேறொரு தனியார் company-ஐ அழைத்து, DPR தயார் செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். Pile foundation போட்டு அதன் உறுதித்தன்மையைப் பார்க்கிறோம். ஏனெனில் கடிதம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்குச் சென்று துறைக்கு வரப்பெற்றிருப்பதால் அதற்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்ற அடிப்படையிலே, எங்கள் துறையில் அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். முதல் ஆய்வில், அது முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இரண்டாவதாக, இன்னும் திறமையானவர்களை அழைத்து அவர்களிடம் இதைக் கொடுத்திருக்கிறோம். Pile foundation-ல் போட்டால் அந்தப் பாலம் நிற்கும் என்ற நிலை ஏற்பட்டால், அந்தப் பணிகளைத் தொடரலாம். ஏனென்றால், நீங்கள் சொல்கிறீர்கள் என்பதற்காக pile foundation போடப்பட்டு, பாலத்தைக் கட்டி, அதற்குப்பின் பாதுகாப்புத்தன்மை இல்லை என்று சொன்னால், அது எந்தளவிற்கு விமர்சனத்திற்கு ஆளாகும் என்பது உங்களுக்குத் தெரியும். இரண்டாவதாக, செய்யப்படும் DPR-ல் முறையாக உறுதித்தன்மை

2024 பிப்ரவரி 21]

இருக்குமேயானால் அந்தப் பணிகளைத் தொடருவதற்கு அரசு முன்னுரிமை அளிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

34—

கிராம நிருவாக அலுவலகம்

***45061—திரு. S.S. பாலாஜி:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, பெரிய விப்பேடு ஊராட்சியில் உள்ள கிராம நிருவாக அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் தொகுதி, பெரிய விப்பேடு ஊராட்சியில் உள்ள கிராம நிருவாக அலுவலர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு அரசளவில் ஏதும் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் கட்டுவது தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் வட்டத்திலுள்ள பெரிய விப்பேடு மட்டுமல்ல, அரசிற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் பெரும் வருவாயை ஈட்டித் தரக்கூடிய காணத்தூர் ரெட்டிக்குப்பம்,